


24.4.2024

தலைப்புச் செய்திகள்

1. நாட்டில் 13 மாநிலங்களில் நாளை மறுநாள் நடைபெறும் 2-வது கட்ட மக்களவை தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலை ஓய்கிறது.

2. மனித சமூகத்தின் உயிர் நாடியாக காடுகள் திகழ்கிறது என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

3. பல்துறை வளர்ச்சியை ஊக்குவிக்க உள்கட்டமைப்பு துறைகளில் முதலீடுகள் அதிகரிக்கப்பட வேண்டுமென்று பிரதமர் திரு. நரேந்திரமோடி வலியுறுத்தி உள்ளார்.

4. வள்ளலார் சர்வதேச மையம் அமைக்கப்படும் பகுதியில் தொல்லியல் குழு ஆய்வு செய்ய தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

5. சர்வதேச தடகள தொடர் ஓட்ட போட்டிகளுக்கான 15 பேர் கொண்ட குழுவை இந்தியா அறிவித்துள்ளது

இனி விரிவான செய்திகள்

□□□□□□□

2-ம் கட்ட தேர்தல்

நாட்டில் 13 மாநிலங்களில் நாளைமறுநாள் நடைபெறும் 2-வது கட்ட மக்களவை தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலை ஓய்கிறது.

இதனையடுத்து அரசியல் தலைவர்கள் இறுதிகட்ட வாக்கு சேகரிப்பில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

சட்டிஸ்கட் மாநிலத்தில் இன்று தேர்தல் பிரச்சாரத்தில் உரையாற்றி பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு.நரேந்திரமோடி, பி.ஜே.பி. அரசால் மட்டுமே இட ஒதுக்கீட்டு முறையை காக்க முடியும் என்று குறிப்பிட்டார்.

பயங்கரவாதம் மற்றும் நக்சல் தீவிரவாதத்திற்கு எதிராக மத்தியில் உள்ள பி.ஜே.பி. அரசு கடும் நடவடிக்கைகளை எடுத்து வருவதாக சுட்டிக்காட்டினார்.

அதே வேளையில் காங்கிரஸ் அதை ஊக்குவிப்பதாக குறை கூறினார்.

மத்திய பிரதேசத்திலும் இன்று அவர் பிரச்சாரத்தில் ஈடுபடுகிறார்.

காங்கிரஸ் கட்சி சார்பிலான சமூக நீதி மாநாட்டில் இன்று உரையாற்றிய அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. ராகுல்காந்தி காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை பிரதமர் திரு. நரேந்திரமோடியை பீதியடைய செய்துள்ளதாக குறிப்பிட்டார்.

காங்கிரஸின் தேர்தல் அறிக்கை தொடர்பாக பிரதமர் தொடர்ந்து கருத்துக்களை வெளியிடுவதன் மூலம் அவரது பயம் புலப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

பி.ஜே.பி. மூத்த தலைவர் திரு. அமித்ஷா ஆலப்புழாவிலும்,

காங்கிரஸ் மூத்த தலைவர் திருமதி பிரியங்கா காந்தி வயநாட்டிலும் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் இன்று முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

கேரள மாநிலத்தில் மொத்தமுள்ள 20 மக்களவை தொகுதிகள்,

கர்நாடகாவில் 14, ராஜஸ்தானில் 13, உத்தரபிரதேசம் மற்றும் மஹாராஷ்டிராவில் தலா 8, மத்திய பிரதேசத்தில் 6, அசாம், பீஹாரில் தலா 5, மேற்கு வங்கம் சட்டீஸ்கடில் தலா 3, திரிபுரா, ஜம்மு காஷ்மீரில் தலா ஒரு தொகுதிக்கு நாளைமறுநாள் வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

மத்திய பிரதேசம் பீட்டல் தொகுதியில் பகுஜன் சமாஜ் கட்சி வேட்பாளர் உயிரிழந்ததை அடுத்து அத்தொகுதியில் நடைபெறவிருந்த 2-ம் கட்ட வாக்குப்பதிவு, 3-வது கட்ட தேர்தலின் போது நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

□□□□□□□

4-ம் கட்ட தேர்தல்

இந்நிலையில் அடுத்த மாதம் 13-ம் தேதி 96 மக்களவை தொகுதிகளுக்கு, நடைபெறும் 4-ம் கட்ட தேர்தலுக்கான வேட்பு மனுக்களை தாக்கல் செய்யும் கால அவகாசம் நாளை நிறைவடைகிறது

மனுக்கள் நாளைமறுநாள் பரிசீலிக்கப்படுகின்றன.

அவற்றை திரும்பப்பெற வரும் 29-ம் தேதி கடைசிநாளாகும்.

இந்நிலையில் 8 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 49 மக்களவை தொகுதிகளுக்கு அடுத்தமாதம் 20-ம் தேதி நடைபெறும் 5-வது கட்ட தேர்தலுக்கான அறிவிக்கை நாளைமறுநாள் வெளியிடப்படுகிறது.

□□□□□□□

மறு வாக்குப்பதிவு

அருணாச்சல பிரதேசத்தில் 4 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு உட்பட்ட 8 வாக்குச்சாவடிகளில் மறு வாக்குப்பதிவு பலத்த பாதுகாப்பிற்கு இடையே இன்று நடைபெற்று வருகிறது

காலை 6 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு பிற்பகல் 2 மணிக்கு முடிவடைகிறது.

கடந்த 19-ம் தேதி நடைபெற்ற முதல்கட்ட வாக்குப்பதிவின் போது இந்த 8 வாக்குச்சாவடிகளிலும் நடைபெற்ற தேர்தல் செல்லாது என்று தேர்தல் ஆணையம் அறிவித்ததை அடுத்து மறு வாக்குப்பதிவு இன்று நடைபெறுகிறது.

இந்த வாக்குச்சாவடிகள் அனைத்தும் அருணாச்சல பிரதேச மேற்கு மக்களவை தொகுதிகளுக்கு உட்பட்டவை.

கடந்த 19-ம் தேதி, அருணாச்சல பிரதேசத்தில் 2 மக்களவை தொகுதிகளுக்கும், 60 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும் முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

□□□□□□□

குடியரசுத்தலைவர்

மனித சமூகத்தின் உயிர் நாடியாக காடுகள் திகழ்கிறது என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

உத்திரகாண்ட் மாநிலம் டேராடூனில் இந்திய வன ஆராய்ச்சி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றியஅவர், வன அதிகாரிகள் காடுகளை பாதுகாத்து பராமரிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்

இந்த பட்டமளிப்பு நிகழ்ச்சியில் 10 பெண்கள் இந்திய வனப்படை அதிகாரிகளாக திகழ்வது குறித்து அவர் பெருமிதம் வெளியிட்டுள்ளார்.

ஆக்கப்பூர்வமான வளர்ச்சி மிகு சமூகத்திற்கு பெண்கள் அடையாளமாக திகழ்கிறார்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்திய வன சேவையில் மேலும் மேலும் மகளிர் சேர வேண்டும் என்றும் அவர் விருப்பம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்திரா காந்தி தேசிய வன பயிற்சி நிறுவனத்தை சார்ந்த 99 பேருக்கு, பூட்டானை சேர்ந்த 2 பயிற்சி அதிகாரிகளுக்கும் பட்டங்கள் வழங்கப்பட்டன.

□□□□□□□

பிரதமர்

பல்துறை வளர்ச்சியை ஊக்குவிக்க உள்கட்டமைப்பு துறைகளில் முதலீடுகள் அதிகரிக்கப்பட வேண்டுமென்று பிரதமர் திரு. நரேந்திரமோடி வலியுறுத்தி உள்ளார்.

புதுதில்லியில் பேரிடர் கட்டமைப்பு சர்வதேச மாநாட்டில் இன்று காணொலி வாயிலாக உரையாற்றிய அவர், பேரிடர் மீட்பையும், பேரிடருக்கு பிந்தைய சீரமைப்பையும் கருத்தில் கொண்டு கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள், மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

எல்லைத் தாண்டிய இழப்புகள் நேரிடும் போது தேசங்கள் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

ஒவ்வொரு நாடும் தங்களது கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலம் ஒட்டுமொத்தமாக உலகம் வளர்ச்சிப்பெறும் என்றும் குறிப்பிட்டார்.

கட்டமைப்பு பிரிவுகளில் அனைத்து நாடுகளின் பங்களிப்பையும் பெற ஏழை நாடுகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் பிரதமர் சுட்டிக்காட்டினார்

□□□□□□□

பஞ்சாயத்து ராஜ் தினம்

தேசிய பஞ்சாயத்து ராஜ் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி பிரதமர் திரு. நரேந்திரமோடி விடுத்துள்ள செய்தியில் கிராமப்புற மற்றும் ஊரகப் பகுதிகளின் மேம்பாட்டிற்கு வழிகோலும் அடித்தள பணியாளர்களை பராட்டியுள்ளார்.

மக்களின் கனவுகளை முன்னெடுத்துச் செல்லும் வகையில், உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்த அரசு தொடர்ந்து செயலாற்றும் என்று குறிப்பிட்டார்.

□□□□□□□

நீதிமன்றம்

கடலூர் மாவட்டம் வடலூரில், வள்ளலார் சர்வதேச மையம் அமைக்கப்படும் பகுதியை தொல்லியல் குழு அமைத்து, ஆய்வுசெய்து அறிக்கை தாக்கல் செய்யும் படி தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்குகள் தலைமை நீதிபதி கங்கா புர்வாலா தலைமையிலான அமர்வின் முன்பு விசாரணைக்கு வந்த போது, சர்வதேச

மையத்தில் ஏற்படுத்தப்படவுள்ள 16 வசதிகளை விலக்கி தமிழக அரசின் சார்பில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

பணியின் போது தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த கட்டடங்கள் கண்டறியப்பட்டால் அவை பாதுகாக்கப்படும் என்றும் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

□□□□□□□

இருவரி

நாகப்பட்டினம் ஒரத்தூர் கிராமத்தில் அமைந்துள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் புறநோயாளிகள் மற்றும் உள்நோயாளி பிரிவுகள் இன்றுமுதல் செயல்பட உள்ளதாக இக்கல்லூரி முதல்வர் டாக்டர் செந்தில்நாதன் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் இணைய சேவைக்கான கண்ணாடி இழையை சேதப்படுத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷா அஜித் எச்சரித்துள்ளார்

விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஆட்டிசம் பாதித்த குழந்தைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஜெயசீலன் நவீன மருத்துவ அறிவியல் முன்னேற்றங்களை ஆட்டிசம் பாதித்த குழந்தைகளின் பெற்றோர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

□□□□□□□

நுங்கு

கிருஷ்ணகிரி மத்தூர், ஊத்தங்கரை உள்ளிட்ட ஒன்றியங்களில் ஆயிரக்கணக்கான எண்ணிக்கையில் பனை மரங்களிலிருந்து நுங்கு இறக்கப்பட்டு சாலையோரங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கடும் வெயில் வாட்டி எடுக்கும் நிலையில் நுங்கு விற்பனை அமோகமாக நடைபெறுவதாக எமது செய்தியாளர் கூறுகிறார்

.. வாய்ஸ் ..

□□□□□□□

கோவில் திருவிழா மோதல்

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் எலவடி கிராமத்தில் கோவில் திருவிழா தொடர்பாக இருதரப்பினருக்கு இடையே நடைபெற்ற மோதலை அடுத்து

வருவாய்த்துறை கோட்டாட்சியர் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்

முன்னதாக கிராம மக்கள் வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

□□□□□□□

கோவில்

திருவாரூர் மாவட்டம் வடுவூர் அருள்மிகு கோதண்டராமர் கோவில் ஸ்ரீ ராமநவமி திருவிழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் இன்றுமாலை நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

□□□□□□□

வானிலை

வளிமண்டல கீழடுக்குகளில் காற்றின் திசை மாறுபடும் பகுதி நிலவுவதால் தென் தமிழக மாவட்டங்கள், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று லேசான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

வட தமிழக உள்மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் வெப்பநிலை இயல்பை விட 4 முதல் 5 டிகிரி செல்சியஸ் அதிகமாக காணப்படுவதாக இம்மையம் அறிவுறுத்தி உள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் வெப்பஅலை வீசியதாகவும்,

9 இடங்களில் 40 முதல் 42 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் அதிகரிக்கக்கூடும் எனவும் தெரிவித்துள்ளது.

தமிழக உள் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று வெப்பஅலை வீசக்கூடும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

□□□□□□□

தொடர் ஓட்ட போட்டிகள்

சர்வதேச தடகள தொடர் ஓட்ட போட்டிகளுக்கான 15 பேர் கொண்ட குழுவை இந்தியா அறிவித்துள்ளது.

பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்கான தகுதி சுற்று போட்டிகளாக வரும் 4, 5 தேதிகளில் பஹாமஸில் இப்போட்டி நடத்தப்படுகிறது.

ஆயிரத்து 600 மீட்டர் ஆடவர் தொடர் ஓட்டப் போட்டிக்கு 8 பேர் கொண்ட குழு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், பெண்களுக்கான ஆயிரத்து 600 மீட்டர் ரிலே போட்டிக்கு, ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்ற பூவம்மா தலைமையில் 7 பேர் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

□□□□□□□

கிரிக்கெட்

ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் டெல்லியில் இன்றிரவு ஏழரை மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் டெல்லி கேப்பிட்டல்ஸ் - குஜராத் டைட்டன்ஸை எதிர்கொள்கிறது.

□□□□□□□

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.